செய்தி வெளியீட்டு எண்: 33 நாள்: 09.01.2010

## செய்தி வெளியீடு – 09.01.2010

திருநெல்வேலி மாவட்டம், ஆழ்வார்குறிச்சி காவல் நிலைய உதவி ஆய்வாளர் வெற்றிவேல், 07.01.2010 அன்று, அம்பாசமுத்திரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற சமாதானக் கூட்டத்தில் பங்கேற்று விட்டு, இருசக்கர வாகனத்தில் காவல் நிலையம் திரும்பிக் கொண்டிருந்த போது, பிற்பகல் சுமார் 2.40 மணியளவில் கடனாநதி பாலம் அருகே அடையாளம் தெரியாத சில நபர்கள் அவரை வழிமறித்து, நாட்டு வெடிகுண்டுகளை வீசி, அரிவாளால் தாக்கியதினால் காயமடைந்த வெற்றிவேல், அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு எடுத்து செல்லும் வழியில் இறந்துவிட்டார். இது சம்பந்தமாக ஆழ்வார்குறிச்சி காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, வழக்கு விசாரணையில் இருந்து வருகிறது.

உதவி ஆய்வாளர் வெற்றிவேலை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதுடன், தமிழக அரசின் சார்பில் ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து லட்சம்) கருணைத் தொகையும், தமிழக முதலமைச்சர் அவர்களின் நிவாரண நிதியிலிருந்து ரூ.2,00,000/– (ரூபாய் இரண்டு லட்சம்) உதவித் தொகையும் வழங்க உத்தரவிட்டுள்ளார்கள். மேலும், அவரது [redacted] குடும்பத்தில் தகுதியுள்ள ஒருவருக்கு [redacted] முன்னுரிமை அடிப்படையில் அரசுப் பணி வழங்கவும் உத்தரவிட்டுள்ளார்கள்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9